பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 20 புதன்கிழமை [06-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 337

# இராணுவ - பொருளாதார நெருக்குதலுடன் பேச்சுக்கள் நடத்துவது மிகக் கடினம்



## தொண்டாவுக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் மாத்தயா

யாழ்ப்பாணம், நவம்பர் 6

அரசாங்கம் தமிழ் மண்ணில் இராணுவ விரிவாக்கத்தை நடத்துகிறது. மறுபுறம் பொருளாதார நெருக்குதலைத் தீவிரப்படுத்தி எமது மக்கள் மீது தாங்கொணாத் துன்பப் பளுவைச் சுமத்தி வருகிறது.

இவ்விதமான இராணுவ—பொருளாதார நெருக்குதலுடன் சமத்துவமான, சுதந்திரமான பேச்சுக்களை நடத்துவது கடினமாகும்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா [மாத்தையா] அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய பதில் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் தொண்டமான், தமிழர் பிரச்சினைக்கான தீர்வுக்கு ஒரு மூலத் திட்டத்தை முன் வைத்து 26-9-91 ஆம் திகதி எழுதிய கடிதத்திற்கு பதிலாகவே திரு. மாத்தையா 31-10-91 திகதியிட்ட இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

திரு. மாத்தையாவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உங்களது 26-9-1991 திகதியிடப்பட்ட கடிதம் இடைத்தது. இந்து நிலவும் போர்ச் சூழ்நிலை காரணமாக உடன் பதில் எழுத முடியவில்லை.

'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் கொழும்பில் உங்களுடன் கலந்தாலோசனை நடத்திவிட்டு யாழ்ப்பாணம் வருகை தந்த பொழுது அவர்களை சந்தித்து எமது நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியிருந்தோம். அவர்கள் எமது கருத்துக்களை உங்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்களோ தெரியவில்லை.

### நல்லெண்ணச் சூழ்நிலை அவசியம்

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. எனினும் சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னோடியாக ஓர் அமைதியான, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறோம்.

ஆயினும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒரு நல்லெண்ண சூழ்நிலைக்கு ஒத்திசைவானதாக அமையவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இரு முனைகளில், ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பாரிய அழுத்தத்தைப் பிரயோகித்து வருகிறது.

ஒருபுறம், தமிழ் மண்ணில் இராணுவ விரிவாக்கத்தை நடத்திக் கொண்டு, மறுபுறம் பொருளாதார நெருக்குதலையும் தீவிரப்படுத்தி எமது மக்கள் மீது தாங்கொணாத் துன்பப் பளுவைச் சுமத்தி வருகிறது.

### அரசாங்கத்தின் அணுகுமுறை சமாதானத்துக்குப் பாதகமானது!

இவ்விதமான இராணுவ - பொருளாதார நெருக்குதல் நிலை சமாதான அணுகுமுறைக்கு பாதகமாகவே அமையும். ஏனென்றால், இந்த நெருக்குதல் நிலை தமிழர் மீதான ஓர் அழுத்தமாக திணிக்கப்படுவதால் இச் சூழலில் சமத்துவமான, சுதந்திரமான பேச்சுக்கள் நிகழ்வது கடினம்.

தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான, நிரந்தரமான தீர்வைக் காண அரசு தரப்பில் உண்மையான, நேர்மையான அக்கறை இருக்குமாயின் இந்த இராணுவ-பொருளாதார அழுத்த அணுகுமுறை கைவிடப்பட வேண்டும்; தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை தோற்றுவிக்கும் வகையில் ஒரு நல்லெண்ணச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்; ஒரு சமரசச் சூழ்நிலையில் தான் சமாதானப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதை நாம் உங்களுக்கு விளக்கிக் கூறத் தேவையில்லை.

### நிபந்தனைக்குள் தீர்வு காண நாம் ஒருபோதும் இணங்கோம்!

இதற்கு மாறாக, தமிழ் மண்ணில் இராணுவ மேலாதிக்கத்தை திணித்து, பொருளாதாரத் தடைகளை இறுக்கி, தமிழ் மக்களை துப்பாக்கி முனையில் நிறுத்தி, தான் வரித்த வரையறைக்குள், தான் விதித்த நிபந்தனைக்குள் பிரச்சினையைத் தீர்க்கலாமென அரசு சிந்திக்குமானால், அது மாபெரும் அரசியல் தவறாகவே முடியும் இத்தகைய அணுகுமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

யாழ்ப்பாணத்திற்கு உங்களை வருமாறு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். கடிதங்கள் மூலம் கருத்துப் பரிமாற்றங்களை நடத்துக் கொள்வதைவிட நேரடியாகச் சந்தித்து...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப...... பிச்சைக்காரரைச் சுகத செய்தது தான் மிச்சம் என்டு சொல்லுங்கோ......!

### மாலைதீவு ஜனாதிபதியே முடிவு செய்வார்

'சார்க்' மாநாடு தொடர்பாக எழுந்துள்ள சிக்கலை—நாளை கொழும்பில் மாநாடு நடத்துவதா என்பதை—மாலைதீவின் ஜனாதிபதி மஃமூன் அப்துல் கையூமே முடிவு செய்வார்.

சார்க்கின் தற்போதைய தலைவர் என்ற முறையில் மாலைதீவின் அரசுத் தலைவரே இது குறித்து முடிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு மாநாட்டின் போது தலைமைப் பதவியை ஸ்ரீலங்காத் தலைவரிடம் மாலைதீவுத் தலைவர் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கவிருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ-8-10)

### பூட்டான் மன்னரின் பிரதிநிதி பங்குபற்றலாம்!

கொழும்பு, நவ. 6

சார்க் உச்சி மாநாட்டில் தாம் கலந்து கொள்ள முடியாத இந்நிலையில் பூட்டான் மன்னர் தனது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பிவைக்கலாம் என்று கொழும்பில் இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-எ]

### பேகம் காலிதாவும் வரமாட்டார்!

கொழும்பு, நவ. 6

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியாவும் தமது கொழும்பு வருகையை ரத்துச் செய்திருப்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

## கொழும்பு 'சார்க்' பிற்போடப்படும்?

கொழும்பு, நவ. 6

நாளை கொழும்பில் ஆரம்பமாகவேண்டிய 'சார்க்' உச்சி மாநாடு ஒத்திவைக்கப்படலாம் என்று மாநாட்டின் அதிகாரிகள் நேற்றிரவு தெரிவித்தனர்.

பூட்டான் தலைவரான மன்னர் வாங்சுக் மாநாட்டில் தான் கலந்துகொள்ள முடியாதிருப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்தே மாநாட்டை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

'சார்க்' அமைப்பு விதிகளின்படி தலைவர்களின் உச்சி மாநாட்டில் அனைத்து தலைவர்களும் ஏகமனதாக அங்கீகரித்தால் மட்டுமே எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் ஒரு நாட்டுத் தலைவர் பங்குபற்றாத நிலையில் மாநாட்டைக் கூட்டுவதோ அல்லது அதில் கலந்து கொள்வதோ அர்த்தமற்றது என இந்திய, நேபாளத் தலைவர்கள் கருதுவதாகவும் அறிவிக்கப்பட்டது. [உ-எ-10]

### நேபாளப் பிரதமர் வருகை ஒத்திவைக்கப்பட்டது!

காத்மண்டு, நவ. 6

கொழும்பு சார்க் மாநாடு பிற்போடப்படக்கூடிய சூழ்நிலை எழுந்திருப்பதை அடுத்து நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராளா தமது கொழும்புப் பயணத்தை ஒத்திப்போட்டார்.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் வெளியுறவு அதிகாரிகள் நேற்று இதனை அறிவித்தனர். (உ-எ)

### இந்தியப் பிரதமர் ராவின் வருகையும் நிச்சயமில்லை!

புதுடில்லி, நவ. 6

'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்ள பூட்டான் தலைவர் கொழும்புக்கு வராவிட்டால் இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவும் கொழும்புக்கு வரமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

இதேவேளை —

கொழும்பில் சார்க் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பில் பங்குபற்ற தனது வெளியுறவு அமைச்சரை இந்தியா அனுப்பவில்லை என்பதும்—

வெளியுறவு இணை அமைச்சரையே அனுப்பியது என்பதும் — குறிப்பிடத்தக்கது. (உ-எ-8)

### வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு பிந்தி ஆரம்பம்

கொழும்பு, நவ. 6

'சார்க்' வெளியுறவு அமைச்சர்களின் மாநாடும் நேற்றுத் திட்டமிட்டபடி காலையில் ஆரம்பமாகவில்லை.

எனினும் மாலையில் இந்த மாநாடு நடைபெற்றது.

காலையில் மாநாடு ஆரம்பமாவது இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன.

அவ்வேளையில் சார்க் வெளியுறவு அமைச்சர்கள் உத்தியோகப் பற்றற்ற முறையில் ஒன்று கூடி, பூட்டான் மன்னர் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளாதமை அடுத்து எழுந்துள்ள நிலை குறித்து

[3-ஆம் பக்கம் பார்க்க]

### பூட்டான் தரப்பில் வெளியுறவுச் செயலர்

நேற்று நடைபெற்ற சார்க் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் பூட்டான் வெளியுறவு அமைச்சர் பங்குபற்றவில்லை வெளியுறவுத்துறைச் செயலர் டி. ஜே. றிஸ்கினே இக் கூட்டத்தில் பங்குபற்றினார். [உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ரைப்ரைட்டர் Portable ஆங்கிலம், ரெமிங்டன், ஒலிம்பியா, பிறதர் மற்றும் ரைப்ரைட்டர்கள் உடன் விற்பனைக்கு உண்டு (விற்பனைக்குப் பின் உத்தரவாதம் உண்டு) பியூட்டீ, 39/17 மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (இ/0780)

### நாற்று விற்பனை

சவுக்கு மலைவேம்பு [மகோகனி], இலுப்பை, நெல்லி, பலா முதலிய மர நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்ளவும். அதிபர், யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம், காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C/0881)

### தேவை

றப்பர் ஸ்ராம்ப் [Rubber Stamp] செய்வதில் அனுபவமுடையவர்களும், வேலை பழக ஆர்வமுள்ள G C E. (O/L) சித்தியடைந்த இருபாலரும் நேரில் வரவும் செல்வம் ஆட்ஸ், காங்கேசன் துறை வீதி, சுன்னாகம். [18680

### மணமகள் தேவை

யாழ் இந்து பெற்றோர் கொழும்பு வங்கியில் தொழில் பார்க்கும் 33 வயது மகனுக்கு, படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். இல. 823, மே/பா உதயன். (4375)

உள்ளூரில்
உற்பத்தி
விடுதலைக்கு
உயிர்நாடி.

### தவறிவிட்டது

திருமதி M J R. பிரான்சிஸ் ஆகிய எனது அடையாள அட்டையும், வீட்டுத் திறப்பும், செபமாலை ஒன்றும் உள்ளடக்கிய பேர்ஸ் ஒன்று யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் பாடசாலைக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [831] 239A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [18683)

### மணப்பெண் தேவை

பிரான்சில் பிரஜாவுரிமையுள்ள 34 வயதுடைய புரட்டாதி நட்சத்திரம் (12 செவ்வாய்) மற்றும் 32 வயதுடைய உத்திரட்டாதி நட்சத்திரம் இரு மணமகன்களுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான மணப்பெண்கள் தேவை. விரைவில் பிரான்ஸுக்குச் செல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தொடர்பு: இல. 364, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18664)

### இலவச திருமண சேவை

கொழும்பில் வேலை செய்யும் டாக்டர் 28 வயது மணமகன், B Sc ஆசிரியை 32 வயது, I C M A. III 28 வயது தொழில் புரியும் மணமகளுக்கும், மணமகன் தேவை. சகல தரங்களிலும் சாதகங்கள் உண்டு. ஞாயிறு காலை நேரில் சந்திக்கலாம். து. விமல 958/8, கே. கே. எஸ். வீதி நச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [18677)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு: 19 — 02 — 1929



உதிர்வு: 07 — 10 — 1991

திருமதி
**பரமேஸ்வரன் மகேஸ்வரி**

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் மறைவின்போது பல்வேறு வழிகளில் உதவிகளும், ஆறுதலும் தந்த எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும், கடமைப்பாட்டையும் நல்கி நிற்கிறோம்.

இன்று 06 - 11 - 1991 புதன்கிழமை நடைபெறும் சபிண்டீகரணத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

மடத்தடி லேன்,
கேணியடி மேற்கு,
கோண்டாவில். (18684)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வானை கந்தையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திருமதி தெய்வானை கந்தையா காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. வீ. க. கந்தையா [இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர்] அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற ரஞ்சன் (உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்), இந்திராதேவி (ஆசிரியர்), மனோரஞ்சிதன் (U S A), ரஞ்சனிதேவி [ஆசிரியர்], உமாதேவி (லங்கா சிமெந்து லிமிட்டெட்) ஆகியோரின் தாயாரும், சாந்தினி, செல்வஜெயசங்கர், மகேந்திரராஜா, ஜேர்ச் ஆகியோரின் மாமியாரும், மகிழ்தினி, நிருபா, யாழினி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5 - 11 - 91 இல் நடைபெற்றன என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

அன்பு இல்லம்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [18682]

## Dr. சின்னப்பு வேலாயுதம்
[பிரபல கண் வைத்திய நிபுணர்]

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்தவரும், யாழ். போதனா வைத்தியசாலையிலும், கொழும்பு கண் வைத்தியசாலையிலும் கண் வைத்திய நிபுணராகக் கடமையாற்றி வருபவருமான வைத்திய கலாநிதி S வேலாயுதம் அவர்கள் 31 - 10 - 1991 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பத்மராணியின் அன்புக் கணவரும், சுகுமார், சுபாஷினி ஆகியோரின் அருமைத் தந்தையும், டினூஷ்வின் அன்பு மாமனும், ஜீவனின் ஆசைப் பாட்டனாரும், காலஞ்சென்ற Dr S. சுப்பையா, திருமதி செய்வநாயகி வீரராஜா, திருமதி இராசநாயகி மயிலவாகனம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், திரு S இரங்கநாதன், திருமதி கமலாம்போதரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இல 3. வவசற் பிளேஸ் கொழும்பு - 6 இல்லத்தில் 2 - 11 - 91 சனிக்கிழமை அன்று நடைபெற்றன. இவ் அறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தேவகி குலத்துங்கபாரதி,
(மருமகள்)

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (18686)

## அம்பலவாணர் இரத்தினசிங்கம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பலவாணர் இரத்தினசிங்கம் (வர்த்தகர், நீர்கொழும்பு) 02 - 11 - 91 இல் நீர்கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர், கதிராசிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கனகலிங்கம் (வர்த்தகர், கோண்டாவில்) அவர்களின் அன்புச் சகோதரரும், கனகம்மாவின் அன்புக் கணவரும், மதியழகன் (கனடா), தேவிகா, கலைவதனன், சிவதர்சன், ரேணுகா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. கனகலிங்கம்.
(சகோதரர்)

A. R. S.,
இருபாலை றோட்,
கோண்டாவில். [18687]

## தம்பையா நவரத்தினம்

சில்லாலை வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த தம்பையா நவரத்தினம் சவூதி அரேபியாவில் அகால மரணமானார். அன்னார் அம்பிகாபதியின் அன்புக் கணவரும், கணேசவேல், கருணைவேல், கதிர்காமவேல், வைகுந்தவேல், சக்திவேல், சாருதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மருமகனும் ஆவார். இறுதிச் சடங்கு இன்று (6-11-91) புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு. [18436]

## காரைநகர் இளைஞர்கள் தொழில்பெறமுடியாதநிலை

யாழ்ப்பாணம், நவ. 6

அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியாது தாம் மிகவும் பாதிக்கப்படுவதாக காரைநகர் பகுதி இளைஞர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இந்த இளைஞர்களில் பலரும் தமது உடமைகளுடன் கல்வி மற்றும் பிற தகைமைச் சான்றிதழ்களை காரைநகரில் கைவிட்டு வந்திருப்பதே இதற்குக் காரணம். (இ-5)

அ. குமரகுரு எழுதிய
**'இறந்த பின் எங்கு செல்கிறோம்'**
(ஓர் ஆய்வு நூல்)
விலை ரூபா: 18/-
எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [18673]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி செல்வத்துரை

அழகொல்லை அளவெட்டியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி செல்வத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பர் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் செல்வத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பேராசிரியர் மகாலிங்கம் [பொறியியல் பீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்], திருமதிகள் மகாலட்சுமி விஸ்வலிங்கம், காலஞ்சென்ற அருந்தவநாயகி அருளானந்தம், விக்னேஸ்வரி சிவகுரு, டாக்டர் சிவனேஸ்வரி சிறீரங்கலிங்கம் [இங்கிலாந்து], செந்தில்நாதன் [பொறியியலாளர் - கனடா], சிவகுமாரன் [பிராந்திய முகாமையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்]-[லண்டன்] செல்வக்குமாரன் [பொறியியலாளர் - கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மகாலிங்கம் [விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக்கழகம்], காலஞ்சென்ற விஸ்வலிங்கம் [A O. பொலீஸ் தலைமையகம்], திரு அருளானந்தம் (இளைப்பாறிய உதவி அதிபர், இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு], டாக்டர் சிவகுரு [R.M O, A M C - யாழ்ப்பாணம்], டாக்டர் சிறீரங்கலிங்கம் [இங்கிலாந்து], திருமதிகள் செந்தில்நாதன் [கனடா], சிவகுமாரன் [லண்டன்], டாக்டர் செல்வக்குமாரன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற N.S. கந்தையா [மலேசியா], காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற இராசம்மா, திரு. சிவபாதசுந்தரம் [ஓய்வுபெற்ற அதிபர், யாழ். பரமேஸ்வராக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை [6-11-1991 புதன்] ஒன்பது மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
குடும்பத்தினர்

"செல்வவாசம்"
அழகொல்லை,
அளவெட்டி. (18688)

## செல்வி சிவஜெயா நடராசா

செல்வி சிவஜெயா நடராசா [05-11-91] நேற்று கொக்குவிலில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி நடராசா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், சந்திரசேகரம் [சவுதி], காலஞ்சென்ற சந்திரராசா [போஸ்], சந்திரமோகன் [ஜேர்மனி], குலசிங்கம் (சவுதி), குமாரகுலசிங்கம் [ஜேர்மனி], சந்திராதேவி, சுந்தரலிங்கம் [அவுஸ்திரேலியா], ஸ்ரீரஜனி, சந்திரசிறீ ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணதேவி, சுலோசனாதேவி, கோமதி, அருளானந்தன் [கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், மிருகவைத்தியசாலை, சண்டிலிப்பாய்], சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் [06-11-91] இன்று முற்பகல் 11. 00 மணியளவில் கொக்குவில் மேற்கு, அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சந்திரசிறீ
(சகோதரர்)

"சந்திரபவனம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [18689]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அதற்கும் பங்கிடு தேவை

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகம் பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர், அவை எல்லா மக்களுக்கும் கிடைத்து வருகின்றன. குறிப்பிட்ட வாரத்தில் என்னென்ன பொருள்கள், எந்தெந்த அளவில் கிடைக்கும் என்ற நிச்சயத்தோடு மக்கள் தங்கள் உணவுத் தேவையைத் திட்டமிட்டுச் சமாளிக்க முடிகிறது அதாவது கிடைப்பதைக் கொண்டு சமாளிக்கப் பழகி வருகிறார்கள்.

கிடைப்பதை எல்லா மக்களும் பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் இந்தப் பங்கீட்டுத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் அதில் பல நடைமுறைக் குறைபாடுகள் உள்ளன.

உணவுப் பொருள்களைப் போலவே — எரிபொருள் — மிகக் குறிப்பாக மண்எண்ணெய் — மக்களுக்கு நாளாந்தம் தேவைப்படும் அத்தியாவசிய பாவனைப் பொருளாகும். அதுவும் குடா நாட்டுக்குள் தாராளமாக வந்து சேர்வதில்லை. அதன் பொருட்டு, மண்எண்ணெய் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கக் கூடியதாகப் பங்கீட்டுக்கு வழங்கப்படுவது அவசியமாகும்.

இது மழை காலம். இரவில் வீட்டில் விளக்கு எரிப்பதற்குப் போதிய மண்எண்ணெய் கிடைக்காவிடில் மக்கள் இருளில் காலத்தைப் போக்க நேரிடும், விஷ ஜந்துக்களின் ஆபத்து அதிகமாக உள்ள மாரி இரவுகளை மக்கள் விளக்கில்லாமல் எப்படிக் கழிப்பது? உயிர்ப் பாதுகாப்புக்கும் மண்எண்ணெய் அத்தியாவசியமாகிறது!

கிளிநொச்சியில் மண்எண்ணெய் பரீட்சார்த்தமாக பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்திலும் மண்எண்ணெய் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்டால் மக்களின் பல கஷ்டங்கள் நீங்கும்.

பொதுமக்களுக்கு அவரவர் தேவைகளை இனங்கண்டு பங்கிட்டு வழங்கலாம். ஆஸ்பத்திரி மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு அவற்றின் தேவைக்கு ஏற்ப கோட்டா முறையில் மண்எண்ணெய் வழங்கப்பட்டால் அவற்றின் சேவைகளும் பாதிக்கப்படமாட்டா.

இவ்வாறான பங்கீடு - கோட்டா இரட்டைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலமே மண்எண்ணெய் வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க முடியும்.

உணவுப் பொருள்கள் விநியோகத்தில் மட்டுமன்றி மண்எண்ணெய் விநியோகத்திலும் பதுக்கல், கொள்ளை லாபம் என்பன உடனடியாகத் தடுக்கப்படவேண்டும்.

மக்களின் முதன்மையான அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் இடம் பிடித்துவிட்ட மண்எண்ணெய். அவர்களுக்கு நியாய விலையில் கிடைப்பதற்கு வசதி செய்வது சம்பந்தப்பட்டவர்களின் கடமையும், பொறுப்புமாகும்.

## இம்முறை அமைதியான தீபாவளி

யாழ்ப்பாணம், நவ. 6

குடாநாட்டில் நேற்று தீபாவளிப் பண்டிகையை மக்கள் ஆடம்பரமின்றி - அமைதியான— முறையில் கொண்டாடினர்.

வேடிக்கையோ, கேளிக்கையோ இன்றி இம்முறை தீபாவளி கொண்டாடப்பட்டது.

மக்களில் பலர் கோவில்களுக்குச் சென்று வழிபாடு நடத்தி, தீபாவளி நாளை அமைதியாகக் கழித்தனர். [உ-5-15]

## மேலதிக சீனி விற்பனை

யாழ்ப்பாணம், நவ. 6

கொம்படிப் பாதை மூலமாக ஒரு தொகை உணவுப்பொருள்கள் குடாநாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பங்கீட்டுத் திட்டத்துக்கு மேலதிகமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு கிலோ சீனி வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு கிலோ 40 ரூபா என்ற அடிப்படையில் இந்தச் சீனி விற்பனை செய்யப்படும்.

யாழ் ஆரியகுளம் சந்தியில் உள்ள உதயம் பல் பொருள் அங்காடி மற்றும் திருநெல்வேலி — பொற்பதி வீதிச் சந்தியில் உள்ள யாழ். மொத்த விற்பனைக் களஞ்சியம் ஆகியவற்றில் இந்தச் சீனி விற்பனை செய்யப்படும் என்று யாழ். மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். [உ]

## கௌரிநோன்பு காப்பு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 6

புங்குடுதீவு சிவன்கோவில் அடியார்களுக்குரிய கௌரி நோன்பு காப்பு திருநெல்வேலி சிவன் கோவிலில் வைத்து இன்று பிற்பகல் 2 மணி முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

## இமெல்டாவுக்கு எதிரான வழக்குகள்; கைவிட பிலிப்பீன்ஸ் அரசு முடிவு

மணிலா, நவ. 6

நாடு திரும்பிய திருமதி இமெல்டா மார்க்கோஸுக்கு எதிரான சகல வழக்குகளையும் கைவிட பிலிப்பீன்ஸ் அரசாங்கம் சம்மதித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது

70 லட்சம் டொலர் பெறுமதியான பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த உடைமைகளை பிலிப்பீன்ஸ் அரசிடம் திருப்பிக்கொடுக்க திருமதி மார்க்கோஸ் இணங்கியதை அடுத்தே, அரசு இத்தகைய முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அரசுக்கும் திருமதி மார்க்கோஸுக்கும் இடையே உடன்பாடு ஒன்று காணப்பட்டுள்ளது. (உ-எ)

## அதிருப்திக் குழு எம். பி. மீது கொலை முயற்சி வழக்கு?

கொழும்பு, நவ. 6

ஐ. தே. க. அதிருப்தியாளர் குழு எம். பிக்களில் ஒருவரான லக்ஷ்மன் செனவிரத்தின மீது கொலை முயற்சி வழக்கு தொடர முயற்சிக்கப்படுவதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அதிருப்தியாளர் குழுத் தலைவர்களான திரு. லலித்அத்துலத் முதலியும் திரு. காமினி திஸநாயக்காவும் இத் தகவலை செய்தியாளர் கூட்டம் ஒன்றில் வெளியிட்டனர்.

பழிவாங்கும் நடவடிக்கையாக அது அமைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (உ-எ)

## கிழக்கில் முக்கிய நபர் கைதாம்!

கொழும்பு, நவ. 6

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு குண்டுகள் தயாரித்துக் கொடுத்து வந்ததாகக் கூறப்படும் முக்கிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன. [உ-எ]

## வடமராட்சியில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 6

வடமராட்சியைச் சேர்ந்த — இலங்கை வங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றில் பணிபுரியும் அதிகாரிகள், ஊழியர்கள் அரச திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்டோரைக் கலந்துகொள்ளும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் [illegible]ப் பிரிவு கேட்டுள்ளது. [உ]

## ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு கிலோ குத்தரிசி!

### பங்கீட்டுக்குக் கிடைக்கும்

ஒவ்வொரு குடும்பமும் வாராந்தம் இரண்டு கிலோ குத்தரிசியை வெளிச்சந்தையில் கொள்வனவு செய்ய வசதிசெய்யப்பட்டிருக்கிறது.

பங்கீட்டு அடிப்படையில் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆகக் கூடிய அளவுக்குள் இரண்டு கிலோ அரிசியை ஒவ்வொரு குடும்பத்தினரும் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

அரசாங்கத்தினால் கப்பல் மூலம் அனுப்பப்பட்ட அரிசிக்குப் பதிலாக — குத்தரிசியிலும் இரண்டு கிலோவை ஒவ்வொரு குடும்பமும் பெற்றுக் கொள்ள சம்பந்தப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் கட்டாயம் வசதிசெய்து கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

இந்த இரண்டு கிலோ அரிசியை ப. நோ. கூ. சங்கங்கள் தாமே கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு வழங்கலாம்; அல்லது தனியார் கடைகளில் பாவனையாளர்கள் இவற்றை வாங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்துகொடுக்கலாம்.

தனியார் கடைகள் மூலம் இந்த அரிசி குடும்பங்களுக்கு வழங்கப்படும்போது குறிக்கப்பட்ட எல்லைக்கு உட்பட்டதாக அரிசி அக்குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை தனியார் வியாபாரியும், சம்பந்தப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களும் உறுதி செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வியாபாரிகள் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் தம்மிடம் அனுப்பப்படும் பாவனையாளர்களுக்கு, அவர்களது 'அ', 'உ' பங்கீட்டு அட்டைகளில் 30 ஆம் இலக்கத்துக்குப் பின்னர் பதிந்துவிட்டு அரிசியை விற்கலாம்.

கடந்த அக்டோபர் 24-ஆம் திகதி வெளிச்சந்தையில் நிலவிய விலையிலும் அதிகரிக்காத விலையில் இந்தஇரண்டு கிலோ அரிசி விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. [உ-3]

## உ. அ. அ. பிரிவுதோறும்

## பாவனையாளர் குழுக்கள் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 6

உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலான பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் அனைத்தும் தமக்கென ஒதுக்கப்பட்ட தனியான அலுவலகங்களில் இன்றுமுதல் கிரமமாகத் தொடர்ந்து இயங்கும்.

பாவனையாளர் பாதுகாப்புக் குழுப் பிரதிநிதி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

குழுக்களின் அலுவலகங்களில் எந்நேரமும் ஆகக்குறைந்தது குழு உறுப்பினர் ஒருவர் கடமையில் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்களின் தேவைபற்றிய தமது பிரச்சினைகளைப் பொதுமக்கள் தத்தமது பகுதிப் பாவனையாளர் குழு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தீர்த்துக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விசேட நிகழ்ச்சிகளுக்காக அத்தியாவசியப் பொருள்கள் தேவைப்படுவோர்கள் எந்த நேரத்திலும் இந்த அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. [உ]

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 6

"விவசாயமும் யாழ். குடாநாட்டின் நீர்வளமும்" என்னும் பொருள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று, இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவு அலுவலகத்தில் நடைபெறும்.

★

மெய்கண்ட தேவர் குருபூசை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது [இ-5]

## கூட்டுறவுச் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 6

கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழன் முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் வறிய குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி ஆராயப்படவுள்ளது. (இ-5)

## நீரிழிவு பற்றிய கருத்தரங்கு

நீரிழிவு நோய் சம்பந்தமாக மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய பீட மண்டபத்தில் நடைபெறும்.

வலி-வடக்கு சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்தின் அனுசரணையுடன சுன்னாகம் லயன்ஸ் கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அன்றைய தினம் நீரிழிவு நோய்ப் பரிசோதனையும் அங்கு இடம்பெறும்.

## வெளியுறவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்தனர்.

காலையில் உத்தியோகப் பற்றற்ற கூட்டமும் மாலையில் மாநாடும் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றன. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைக்குள் ....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] எமது நிலைப்பாட்டை நீங்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள முடியுமென நாம் எண்ணினோம்; அத்தோடு, எமது மக்களது கருத்துக்களைக் கேட்டறியவும் அவர்கள் எதிர்கொள்ளும் மோசமான வாழ்க்கை நிலையை நேரில் கண்டறியவும் இந்த விஜயம் நல்லதொரு வாய்ப்பாக அமைந்திருக்கும்.

## உங்களின் வேறுவித நிலைப்பாடு எமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது

ஆனால் நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு வேறு விதமாக இருக்கிறது. அதாவது ஒரு பொதுவான மூலத்திட்டத்தில் முதலில் இணக்கம் கண்டு, அதன் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமாகவேண்டும் எனக் கருதுகிறீர்கள். இது குறித்து சில யோசனைகளையும் முன்வைத்து அதற்கு எமது கருத்துக்களையும் கேட்கிறீர்கள்.

எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் அரசின் அநுசரணை அற்றது என்பதை குறிப்பிடும் நீங்கள் இந்தக் கருத்துக்கள் முற்றுமுழுதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பானது என்பதை வலியுறுத்துகிறீர்கள். இது எமக்கு ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கிறது.

ஏனென்றால் நீங்கள் முன்வைத்த கருத்துக்களுக்கு ஆளும் கட்சியினதோ அல்லது சிங்கள எதிர்க்கட்சிகளினதோ ஒப்புதல் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், இந்த யோசனைகள் பற்றி நாம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் மத்தியில் நிகழும் பேச்சுக்களாகவே கருதப்படும்.

## தென்னிலங்கைக் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றீர்களா?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான, வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை பற்றி எமது முழுமையான விமர்சனத்தை தெரிந்து கொள்வதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கள் குறித்து ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சிகளினதும் நிலைப்பாடு எப்படியாக உள்ளது என்பதை நீங்கள் முதலில் அறிந்திருப்பது அவசியம் அல்லவா?

உங்களது யோசனைகள் தமிழர் பிரச்சினையின் சில அடிப்படை அம்சங்களை (குறிப்பாக நிலவுரிமை, குடியேற்றம், பாதுகாப்பு, பிரதேச அபிவிருத்தி) தொட்டு நிற்பினும் ஒரு முழுமையான தீர்வுத்திட்ட வடிவமைப்பினைக் கொண்டதாக இல்லை. இந்திய – இலங்கை உடன்பாட்டில் பிரேரிக்கப்பட்டு, பதின்மூன்றாவது அரசியல் யாப்பு திருத்தத்தால் சட்டவாக்கம் பெற்ற பழைய மாகாணசபை திட்டவரையறைக்குள் இந்த யோசனைகள் உட்படுத்தப்பட்டவை போலத் தெரிகிறது.

## ஒற்றையாட்சி அரசமைப்பில் சுயாட்சி முறை சாத்தியப்படாது

மாகாண சபைத் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை எல்லாம் இங்கு புட்டுக்காட்டுவது அவசியமல்ல. இது நடைமுறைப் படுத்தப்பட்டு தோல்வி கண்ட ஒரு தீர்வுத் திட்டம் என்பதும் உங்களுக்குத் தெரியாததல்ல.

சிங்களப் பெரும்பான்மையினரின் அபிலாசைகளை பட்டும் பேணிப் பாதுகாக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் மத்திய அரசிடம் அனைத்து ஆட்சிபதிகாரங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கும் போது, பிரதேச ரீதியில் உருப்படியான சுயாட்சித் திட்டம் எதையும் உருவாக்குவது சாத்தியமல்ல என்பதே எமது கருத்து. நீண்டகால வரலாற்று அனுபவம் இந்த அரசியல் உண்மையை எடுத்தியம்புகிறது. இந்தியத் தலையீடும் இந்த வரலாற்று அனுபவத்தையே கற்றுக் கொண்டது.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்ட நாம் உறுதியோடு, ஆயுதமேந்திப் போராடி வருகிறோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆயினும் எமது போராட்டப் பாதையில் சமாதான அணுகுமுறைகளை நாம் ஒரு பொழுதும் நிராகரித்ததில்லை.

## தமிழர்களின் தேசிய அந்தஸ்தை அங்கீகரிக்கும் தீர்வே தேவை

தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு அவர்களது தேசிய அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால், நாம் அதனை பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறோம். இந்தக் கருத்தை நம் பல தடவைகள் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறோம். இப்படியான ஒரு நியாயமான, நாகரீக உலகம் ஏற்றுக் கொள்ளும் முற்போக்கான தீர்வுத் திட்டங்களை சிங்கள அரசியல்வாதிகள் சாதகமாக கருத்தில் எடுத்துக் கொள்வார்களா என்பதும் சந்தேகமே.

இந்தக் கடிதத்தில் எமது நிலைப்பாட்டினை மிகவும் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம். உங்களது சமாதான முயற்சிக்கு இது பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம். — இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-இ]


The College of Higher Studies
ஆனைப்பந்தி.

தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள்

பகல் நேர வகுப்புகள்
9-00 — 1-00

சனி, ஞாயிறு
வகுப்புகள் 9-00—6-00

அனுமதிக்கு முந்துங்கள்.
[சி-0776]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 6-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை சந்தைப்படுத்த தடை ஏதும் இல்லை!

### பாவனையாளர் பாதுகாப்புக் குழுவினர் விளக்கம்

அத்தியாவசியப் பொருள்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கோ அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கோ தடை ஏதும் விதிக்கப்படவில்லை.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்தலாம்; வர்த்தகர்கள் அவற்றைக் கொள்வனவுசெய்யலாம்; அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்முதல் செய்யும் நெல்லைக் குற்றி அரிசியாக்கலாம். அவற்றுக்குத் தடை ஏதும் விதிக்கப்படவில்லை.

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆனாலும் உற்பத்திப் பொருள்களைக் கொள்முதல் செய்வோர் தம்மிடம் இருக்கும் கையிருப்பின் அளவைத் தமது பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உற்பத்திப் பொருள்களைக் கொள்முதல் செய்வோர் அவற்றைத் தமது இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கான 'பெர்மிட்டுகளை' உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## மேலும் 3 குழந்தைகள் அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ். அகதி முகாம்களில் பரவி வரும் வயிற்றோட்டத்தால் நேற்றும் மூன்று குழந்தைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் இந்து மாளிர் கல்லூரியில் உள்ள முகாமிலிருந்து ஜான்ஸிராணி (வயது 10), டசிரதன் (வயது 01) ஆகியோரும் வேம்படி முகாமிலிருந்து நதீஸ்குமார (வயது 6) என்ற சிறுவனும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 3 நாட்களுக்கு முன் நாவற்குழி முகாமில் பொன்னாலையைச் சேர்ந்த சுமார் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் வயிற்றோட்டத்தால் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த முகாமில் மேலும் பலர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## ஆனையிறவு முகாமிலிருந்து அடிக்கடி ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 6

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கடந்த சில நாட்களாக சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு— பயணிகள் பஸ் பயணம் செய்துகொண்டிருந்த சமயம்—கொம்படி, ஊரியான் பகுதிகளை நோக்கி, திடீரென ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பயணிகள் சிதறி திசைதெரியாது ஓடினர். தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

சம்பவதினம் மாலை 4 மணிக்கும் இயக்கச்சி, குறிஞ்சாத்தீவுப் பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-15-3)

## சுவர் இடிந்து வீழ்ந்ததால் காயம்

ஷெல் தாக்குதலினால் சேதமுற்றிருந்த கோவில் சுவர் ஒன்றில் ஏறி, நெல்லிக்காய் பிடுங்க முற்பட்ட சிறுவன் சுவர் இடிந்து கீழே விழ்ந்ததால், சுவர் இடிபாடுகளுக்குள் சிக்கி காலில் படுகாயமடைந்தான்.

உடுவில் வெட்டுக்கட்டைப்பிள்ளையார் கோவிலில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுவிலைச் சேர்ந்த அருணைமத்துரை பிரபாகரன் (வயது 18) என்ற சிறுவனே காயமடைந்தான். [உ-15]


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அன்னம்மா சிவகுருநாதன்

தோற்றம்: 17-08-1916 மறைவு: 18-10-1990
திதி: 06-11-1991

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
'அன்ன விலா',
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். [18588]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org